உ

# அகில இலங்கைக் கம்பன் கழகம் முன்னெடுக்கும் புதிய முயற்சி

# ‘உயர்வோம்’

# ஆளுமைத்திறன் பயிற்சி மையம்

*************

## எமது அகில இலங்கைக் கம்பன் கழகம் பற்றிய ஓர் அறிமுகம்

**உ**லகம் போற்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பெயரால் எமது அகில இலங்கைக் கம்பன் கழகம், 1980 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, கடந்த 42 வருடங்களாக மொழி, சமயம், கல்வி, கலை, கலாசாரம், சமூகம் முதலியவற்றை வளர்தெடுக்கும் பணிகளில் முன்னின்று உழைத்து வருகிறது.

யாழ்ப்பாணம் நல்லூரிலும், கொழும்பு வெள்ளவத்தையிலும் இரு அலுவலகக் கட்டிடங்களும், வெள்ளவத்தை இராமகிருஷ்ணதோட்டத்தில் ‘ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி தத்துவத் திருக்கோயில்’ எனும் ஆலயமும் எமது கழகத்திற்கென சொந்தமாக இருக்கின்றன.

எமது அகில இலங்கைக் கம்பன் கழகம், இலங்கை நீதி அமைச்சின் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் **‘அகில இலங்கைக் கம்பன் கழகம் நம்பிக்கைப் பொறுப்பு’** எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டு 29.03.2005 திகதியிட்ட அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அது தவிரவும் இலங்கை இந்துக்கலாசாரத் திணைக்களத்திலும் எமது கழகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவுஇலக்கம் HA/8/TA/9/65).

எமது கழகம் இதுவரை ஐம்பதிற்கு மேற்பட்ட மாபெரும் இலக்கிய விழாக்களை நடாத்தியுள்ளதோடு, தரம்மிக்க பல இசைவிழாக்களையும் நாட்டியவிழாக்களையும் ஆண்டுதோறும் நடாத்தி வருகிறது. இவ்விழாக்களில் உலகளாவிப் புகழ்பெற்ற பல இயல், இசை, நாடக அறிஞர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

நாம் பல்துறை சார்ந்த சமூக அறிஞர்கள் பலரை எமது கம்பன் விழாக்களில் கௌரவித்து வருவதோடு, உலகளாவி தமிழ்ச்சேவை செய்யும் பெரியோர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும், **‘கம்பன் புகழ் விருது’** எனும் பெயரிலான விருது ஒன்றினையும் வழங்கி வருகிறோம். இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட நூல்களையும் எமது கழகம் வெளியிட்டுள்ளது.

## எதற்காக இந்தப் புதிய முயற்சி?

மூன்று தசாப்தங்களிற்கு மேலாக நம் மண்ணில் நடைபெற்ற போரால், நம் தமிழினத்தின் புதிய தலைமுறை இழந்தவைகள் பல. அவற்றுள் முக்கியமானதாக, நம் இளையோர் இழந்து நிற்கும் ஆளுமைத்திறனைக் குறிப்பிடவேண்டும்.

இன்றும் இலங்கை அளவில் நம் இளைஞர்கள் கல்வித் தரத்தால் நிமிர்ந்து நிற்பினும், பல ஆண்டுகள் உலகத்தை விட்டுத் தனித்திருந்த காரணத்தால், அவர்களிடம் ஆளுமைத்திறன் மிகவும் குன்றிப்போயுள்ளதாய் அறிஞர்கள் கருதுகின்றனர்.

கல்வித்துறை, நிர்வாகத்துறை, அரசியல்த்துறை என, பலதுறைகளிலும் பங்கேற்றுச் செயலாற்றி வரும் நம் இளையோர் பலரிடம், ஆளுமைக்குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் அவர்கள் தத்தம் துறையில் நிமிர்வற்று செயலாற்றி வருவதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். இது மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

இன்றைய நிலையில் எதிர்நீச்சல் இட்டு முன்னேற வேண்டிய நம் தமிழினம், இத்தகு செயற்பாட்டால் நாளுக்குநாள் பலவீனமுற்று வருகிறது. ஒரு காலத்தில் நம் தமிழ் இளைஞர்களைப் பார்த்து ஆளுமை பயின்ற பேரின இளைஞர்கள், கடந்த முப்பது ஆண்டுகளில் ஆளுமைத்திறனில் வேகமாய் வளர்ச்சியுற்று நிற்கிறார்கள். இன்று நம் இளைஞர்களைவிட ஆளுமைத்திறனில் பலவிதத்திலும் உயர்ந்து நின்று தாம் தாம் வகிக்கும் பதவிகளூடு அவர்கள் காட்டும் ஆற்றல் நம்மை வியக்கவைக்கிறது.

இவ் ஆளுமைத்திறன் இழப்பால், மனதளவில் சோர்வுற்று, முன்னேற முடியாமல் தத்தளித்து நிற்கும் நம் இளையோரை அந்நிலையிலிருந்து மீட்டெடுத்து, நம் இனத்திற்குரித்தான பழைய நிமிர்வை உண்டாக்கவேண்டும் என்பதற்காகவே எமது கழகம் தனது செயற்பாட்டின் ஓர் அங்கமாக **'உயர்வோம்'** எனும் பெயரிலான '**ஆளுமைத்திறன் பயிற்சி மையம்**' ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

## 'உயர்வோம்' நிறுவனத் தலைமையகம் எங்கு அமையப் போகிறது?

மேற்படி 'உயர்வோம்' அமைப்புக்கான தலைமையகத்தை, அரசாங்கத்தினால் முன்பு கிளிநொச்சியில் எமக்கு வழங்கப்பட்ட ஒரு ஏக்கர் காணியில் அமைத்து வருகிறோம். இதற்காக புதியதோர் கட்டிடத்தொகுதி எம்மால் உருவாக்கப்பட்டுவருகிறது.

## நீங்கள் அமைத்து வரும் கட்டிடத் தொகுதி பற்றிய வீபரம் என்ன?

- இக்கட்டிடத் தொகுதி இரண்டு மாடிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
- இதன் கீழ்த்தளத்தில் அலுவலகம், விருந்தினர் தங்கும் அறைகள், நூலகம், ஒலி, ஒளி நூலகம், கருத்தரங்க மண்டபம், குளியலறைகள், சமையலறை என்பன அமைந்திருக்கும்.

- மேல்த்தளத்தில் மாணவர்கள் தங்கும் அறைகளும், குளியலறைகளும், கருத்தரங்க மண்டபமும் அமைந்திருக்கும்.
- இக்காணித் தொகுதியின் உள்ளே வெவ்வேறாக வழிபாட்டிடம், சமையல்கூடம், பயிர்வளர்ப்பிடம், பசுவளர்ப்பிடம், விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக்கூடம், சர்வமத பிரார்த்தனை அறை ஆகியவையும் இங்கு அமைக்கப்படவுள்ளன.

## இக் கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கான செலவு தீர்மானிக்கப்பட்டுள்ளதா?

- இக்கட்டிடத் தொகுதிகளை அமைக்க அண்ணளவாக இலங்கைப் பணத்தில் 300 மில்லியன் ரூபா வரை செலவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

## 'உயர்வோம்' நிறுவன அமைப்பின் மூலம் எதைச் சாதிக்கப் போகிறீர்கள்?

இந்த 'உயர்வோம்' எனும் சமூக, நல அமைப்பினூடு,

- அற உணர்வு கொண்ட,
- இன மத பேதமற்ற,
- தேசிய உணர்வுமிக்க,
- இனப்பற்றுள்ள,
- மும்மொழித்திறனுள்ள,
- ஆளுமையும் ஆற்றலும் நிறைந்த,
- உலகத்தரத்திலான தகுதிகள் கொண்ட,

ஓர் இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும் என்பதையே நாம் எமது நோக்கமாய்க் கொண்டுள்ளோம்.

## இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிச் சொல்லுங்கள்!

நம் இளையோரின் நிமிர்வினால், நமது இனத்தின் வருங்காலப் பெருமைக்கு வித்திடலாம் என நினைந்து நாம் உருவாக்கிவரும் இந்த 'உயர்வோம்' அமைப்பின் செயற்பாடுகள் பற்றி அறிய விரும்புவோர்க்காக, அதன் அமைப்புப் பற்றியும் அது பற்றிய எமது ஆரம்ப எண்ணங்களைப் பற்றியும் கீழே பதிவு செய்கிறோம்.

- நேர்முகத்தேர்வு மூலம் ஓரளவு இயல்பாளுமை கொண்ட இளையோர் சிலரைத் தேர்ந்தெடுத்து, 3 மாதங்கள் அளவிலான காலத்திற்கு அவர்களுக்கான முதல்நிலை ஆளுமைப் பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.
- இப்பயிற்சி நிறைவுற்றபின் 4 அல்லது 5 மாதங்கள் கழித்து இவர்கள் அடைந்திருக்கும் வளர்ச்சியைக் கணிப்பிடுவதற்காகவும், மேலும் இவர்களுக்கான உயர் பயிற்சி நெறிகளை அளிப்பதற்காகவும், இப்பயிற்சியாளர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு பின்னரும் 1 மாதம் இவர்களுக்கான நிறைவு பயிற்சிநெறி வழங்கப்படும்.
- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களே இப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- இம் மூன்று மாத காலத்திலும் அவர்கள் 'உயரவோம்' நிறுவனத்தில் முழுநேரமாகத் தங்கியிருந்து பயிற்சி பெற வேண்டியிருக்கும்.
- இவர்களுக்கான உணவு, தங்கும் வசதி மற்றும் பயிற்சி நெறிக்கான செலவுகள் அனைத்தையும், இப்பயிற்சி நெறி தொடங்கும் காலத்தில் 'உயர்வோம்' அமைப்பே இலவசமாக வழங்கும்.
- முதலில் இம்மாணவர்களுக்கு மும்மொழிப்பயிற்சி மிக ஆழமாய் வழங்கப்படும்.
- இவர்களுக்கான மேற்படி மொழிப்பயிற்சியை, அந்தந்த மொழியில் ஆற்றல் பெற்ற, அவ்வவ் இனைத்தையே சார்ந்த அறிஞர்களே வழங்குவார்கள்.
- இவ் அறிஞர்கள் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இவ் இளையோருடன் ஒன்றாகத் தங்கியிருந்து அவர்தம் மொழித்திறனை வளர்த்தெடுக்கப் பலவகையாலும் ஆவன செய்வார்கள்.
- இப்பயிற்சிக்கான காலப்பகுதியில் இடையிடையே வீரியமிக்க பல்துறை சார்ந்த ஆளுமையாளர்களை, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து வருவித்து அவர்களுடனான சங்கமத்தை உருவாக்கி, இம் மாணவர்களுக்கான ஆளுமைத்திறன் வளர்த்தெடுக்கப்படவுள்ளது.
- இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில், கலாசாரப் பரிவர்த்தனை மூலம் நம் மாணவர்களைத் தென்பகுதியில் உள்ள பேரினத்தைச் சார்ந்த குடும்பங்களுடன் சில நாட்கள் தங்கவத்து இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் மொழி ஆற்றலையும் உருவாக்க நினைந்துள்ளோம்.
- அதுபோலவே பேரின மாணவர்கள் சிலரையும் இங்கு வருவித்து, நம் மாணவர்களுடன் கலந்து பழகச் செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.

- இப்பயிற்சியின் ஒரு அம்சமாக உயர் அரசியல் தலைவர்கள், நிர்வாகத் தலைவர்கள். கல்வியாளர்கள், மதத்தலைவர்கள், உலக வர்த்தகர்கள் போன்றோரைச் சந்திக்கச் செய்து, அவர்களுடன் தங்கியிருந்து அவர்தம் செயற்பாட்டைக் கவனிக்கவும், அவர்களின் ஆற்றல்களை உள்வாங்கச் செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.
- இச்செயற்பாடுகளை உள்நாட்டில் மட்டுமன்றி அயலிலுள்ள வெளிநாடுகளிலுமாகச் செயற்படுத்த நினைந்துள்ளோம்.
- இங்கு தங்கியிருக்கும் காலப் பகுதியில் மாணவர்களுக்கு நமது மண்ணுக்குரிய கலை, கலாசாரம், பண்பாடு சார்ந்த நெறிகள் போதிக்கப்படும்.
- இப்பயிற்சிக் காலத்தில், நம் மண்ணில் வாழும் பிற இனத்தவரின் கலை, கலாசாரம், பண்பாடு, சமயம், உணவுமுறை ஆகியவை இம் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படும்.
- பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதை எதிர்கொள்ளும் ஆற்றலையும், சுய பெருமிதம் பேணி நடக்கும் துணிவையும், தேவையின்றி எவர்க்கும் பணிந்து போகாத திறனையும், ஆணவமற்ற நிமிர்வையும் இம் மாணவர்கள் அடைவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும்.
- மருத்துவம், விஞ்ஞானம், கலை, சட்டம், முகாமைத்துவம், கணினி போன்ற பல்துறை சார்ந்த விடயங்களிலும் தேவையான அளவில் இவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

## இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு பயன் செய்யும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

- இந்த வளாகத்தினுள் **'அட்சய கணபதி'** எனும் 5 அடி உயரமான விநாயகர் சிலை ஒன்றை ஸ்தாபித்துள்ளோம். இவ்வாலயம் பொதுமக்களின் வழிபாட்டிற்காகவும் திறந்துவிடப்படவுள்ளது.
- அந்த விநாயகருக்கு அருகில் எம்மால் அமைக்கப்படவுள்ள அன்னதான மண்டபத்தில், இப்பிரதேசத்தில் வாழும் வறிய மக்களுக்கு வாரந்தோறும் அன்னதானத்தினை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.
- மேற்படி அன்னதானத்திற்கான ஒருநாள் செலவு, தற்போதைய நிலையில், ரூபா 75,000 என்று கணிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் வரும் 52 வாரங்களும் நடைபெறவுள்ள இவ் அன்னதானங்களில் ஒரு வாரப்பொறுப்பினை ஏற்று வருடா வருடம் தொடர்ந்து செய்ய முன்வருவோர், எம்முடன் 0094- 718111319, 0094- 772935509, எனும் வாட்ஸப் இலக்கங்களோடு தொடர்பு கொள்ளலாம்.

- மேற்படி அன்னதான மண்டபத்தில் வாரந்தோறும் சிறுவர்களுக்கான அறநெறிப்பாடசாலையும், மாதந்தோறும் இலவச மருத்துவ முகாங்களும் இப்பிரதேச மக்களின் நன்மைக்காக எம்மால் நடத்தப்படவுள்ளன.

## கழகம் கைகூப்பி வேண்டுகிறது

நம் இனத்தின் உயர்வு நோக்கி நாம் செய்ய நினைந்திருக்கும் மேற்படி திட்டங்களுக்கான ஆதரவை உங்களிடம் கைகூப்பி வேண்டி நிற்கிறோம். முடிந்தவர்கள் தனித்தனியாய் உதவுவதோடு, தங்களின் உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோர்க்கும் இம் முயற்சி பற்றிய செய்தியை எடுத்துச் சொல்லி அவர்களையும் இப் பணியில் ஈடுபடுத்துமாறு தங்களிடம் பணிந்து வேண்டி நிற்கிறோம்.